**கிராமின் கிருஷி மவுசம் சேவா**
இந்திய வானிலை துறை
தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்
கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 31-10-2023**

**திருவள்ளுர்(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2023-10-31 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2023-11-01 | 2023-11-02 | 2023-11-03 | 2023-11-04 | 2023-11-05 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 15.0 | 2.0 | 10.0 | 12.0 | 10.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 30.0 | 30.0 | 30.0 | 31.0 | 31.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 24.0 | 24.0 | 24.0 | 25.0 | 25.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 96 | 96 | 96 | 94 | 94 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 78 | 78 | 78 | 75 | 75 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 6 | 6 | 6 | 5 | 5 |
| காற்றின் திசை (கோணம்) | 70 | 70 | 70 | 90 | 90 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 8 | 8 | 8 | 6 | 6 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

வரும் ஐந்து நாட்களுக்கு மிக லேசான முதல் மிதமான மழைப்பொழிவு எதிர் பார்க்கலாம்; அடுத்த ஐந்து நாட்களுக்கு அதிகபட்ச வெப்பநிலை 30.0°C-31.0.0°C ஆகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 24.0°C-25.0°C ஆகவும் இருக்கலாம்; காற்றின் ஈரப்பதம் 75-96% வரை எதிர்பார்க்கப்படுகிறது; காற்றின் வேகம் மணிக்கு 5.0-6.0 கி.மீ வரை இருக்கலாம்; காற்றின் திசை வடகிழக்கு முதல் கிழக்கிலிருந்து வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

05.11.2023 முதல் 11.11.2023 வரை தமிழ்நாட்டில் மழைப்பொழிவு இயல்பு நிலையினை விட அதிகமாகவும், குறைந்தபட்ச வெப்பநிலை மற்றும் அதிகபட்ச வெப்பநிலை இயல்பு நிலையில் பதிவாகக்கூடும்.

## குறுஞ்செய்தி :

வரும் ஐந்து நாட்களுக்கு மிக லேசான முதல் மிதமான மழைப்பொழிவு எதிர் பார்க்கப்படுவதால், வயலில் நீர் தேங்காதவாறு முறையான வடிகால் வசதியினை மேம்படுத்தவும்.

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| நெல் | நெற்பயிர்-1.தொடர் மழை காரணமாக மண் ஊட்டச்சத்துகள் மழை நீருடன் கலந்து வெளியேற வாய்ப்புள்ளது. மழையின் அளவை பொறுத்து பயிர்களுக்கு உரமிட வேண்டும்; 2.தொடர் மழை நெல் வயல்களில் களை வளர்ச்சியை ஊக்குவிக்கும், மழைக்குப் பிறகு பொருத்தமான களைக்கொல்லிகள் அல்லது கைமுறையாக களையெடுக்கவும்; 3.பயிர்களுக்கு முறையான வடிகால் வசதிகளை வழங்குதல். |
| உளுந்து | பயிறு வகை பயிரான உளுந்தில் தற்போது நிலவும் வானிலை காரணமாக முள்ளு காய்த்துளைப்பான் தாக்கம் ஏற்பட வாய்ப்புள்ளதால் கட்டுப்படுத்த ஏக்கருக்கு தியோடிகார்ப் 75% WP 250 கிராம் என்ற வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம். (மழைப்பொழிவு நின்ற பின் தெளிப்புகளை மேற்கொள்ளவும்) |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| கத்திரிக்காய் | காய்கறி பயிரான கத்தரியில் தற்போது நிலவும் வானிலை காரணமாக காய்த் துளைப்பான் தாக்கம் ஏற்பட வாய்ப்புள்ளதால் கட்டுப்படுத்த வேப்பங்கொட்டை சாறு 5 சதம் அல்லது டைமெத்தோயேட் 30 % EC 10 லிட்டர் தண்ணீருக்கு 7 மில்லி லிட்டர் வீதம் கலந்து தெளிக்கவும்.மற்றும் ப்ரைஸ்டோமரஸ் டெஸ்டுசியஸ் மற்றும் செராமஸ்டஸ் பெலவோரிப்டெலில் ஒட்டுண்ணியைக் கொண்டு கட்டுப்படுத்தலாம். (மழைப்பொழிவு நின்ற பின் தெளிப்புகளை மேற்கொள்ளவும்) |
| மல்லி கை | மல்லிகையில் பயிரில் தற்போது நிலவும் வானிலை காரணமாக மொட்டு புழு தாக்கம் ஏற்பட வாய்ப்புள்ளதால் கட்டுப்படுத்த ஏற்பட வாய்ப்பு உள்ளது. ஸ்பைனோசாட் 45% SC 5 மில்லி லிட்டர் வீதம் 10 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும். (மழைப்பொழிவு நின்ற பின் தெளிப்புகளை மேற்கொள்ளவும்) |

## உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை:

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பசு | பருவ மழை தொடங்கும் நிலையில் கால்நடை தீவன வைக்கோல்களை பாதுகாப்பான இடங்களில் சேமித்து வைக்கவும். |